
பக்கங்கள் 20+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 27 வியாழக்கிழமை 10.04.2025 | அதிர்வு 250

## 35 ஆண்டுகளின் பின்னர் கடும் கட்டுப்பாடுகளுடன் இன்று திறக்கப்பட்ட வீதி



(விரிவான செய்தி 3ஆம் பக்கம்)

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# மேலும் 35 வேட்புமனுக்களை ஏற்க மேன்முறயீட்டு நீதிமன்றம் உத்தரவு

## வடக்கில் 10 இடங்களில் சங்குக் கூட்டணி களத்துக்குத் திரும்புகின்றது

வடக்கு மாகாணத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் (சங்கு சின்னக் கூட்டணியின்) 10 வேட்புமனுக்கள் உட்பட நிராகரிக்கப்பட்ட மொத்தம் 35 வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்ளும்படி மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று உத்தரவிட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற பதில் தலைமை நீதியரசர் முகமட் லபார், நீதியரசர் பிரியங்கா பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய ஆயம் இன்று இந்த உத்தரவை விடுத்தது. 02

# தேசபந்து பிணையில் விடுவிப்பு

(எஸ்.ஜினோதன்)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைப் பிணையில் விடுதலை செய்ய மாத்தறை நீதிவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி மாத்தறை, வெலிகம – பெலேன பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஆனால், தேசபந்து தென்னக்கோன் நீதிமன்ற உத்திரவை அவமதித்து சுமார் 20 நாட்களாகத் தலைமறைவாக இருந்த நிலையில், கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி காலை மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்த பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# யாழில் சர்வதேச கிரிக்கெட் மைதானம்: அமைச்சர் குழு இன்று நேரில் ஆராய்வு!





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஒன்றை அமைப்பது தொடர்பாக இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே உள்ளிட்ட குழுவினர் கள விஜயமொன்றை இன்று மேற்கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்சியாளரும் முன்னாள் வீரருமான சனத் ஜயசூரியவும் இந்த விஜயத்தில் பங்கேற்றார்.

மண்டைதீவுக்கு விஜயம் செய்த குழுவினர் மைதானம் அமைப்பது தொடர்பான நிலைமைகளை ஆராய்ந்தனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன், விளையாட்டுத் திணைக்களத்தின் அதிகாரிகள், பிரதேச செயலாளர், இராணுவத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### மேலும் 35 வேட்பு...

முன்னர் நிராகரிக்கப்பட்ட 37 வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளும்படி மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்கனவே கடந்த வாரம் உத்தரவிட்டிருந்தமை தெரிந்ததே.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தாக்கல் செய்த 10 வேட்புமனுக்களும், மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி தாக்கல் செய்த வேட்பு மனுவும், கண்டி மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவையும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு சுயேச்சை குழுவும், நுவரேலியா மாவட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ/ம், கொழும்பு மாவட்டத்தில் ஒரு சுயேச்சைக் குழுவும் உட்பட மொத்தம் 35 தரப்புக்கள் தாக்கல் செய்த வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்ளும்படி மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று உத்தரவிட்டிருக்கின்றது.

கடந்த வாரமும், இன்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய சில வழக்குகளின் இத்தகைய உத்தரவுகள் தொடர்பாக தேர்தல் ஆணையம் சட்டமா அதிபர் ஊடாக உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யும் எனக் கூறப்பட்ட போதிலும் அது தொடர்பான செய்திகள் இன்னும் வெளியாகவில்லை.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இப்போதைய உத்தரவுப்படி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி யாழ். மாவட்டத்தில் வேலணை, வல்வெட்டித்துறை, காரைநகர், நெடுந்தீவு தவிர்ந்த ஏனைய பிரதேச சபைகளுக்கான தேர்தலில் களத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# 35 ஆண்டுகளின் பின் கடுமையான கட்டுப்பாடுகளுடன் திறக்கப்பட்ட வீதி

## காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை மாத்திரமே மக்கள் பாவனைக்கு அனுமதி

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

**யாழ்ப்பாணம், வசாவிளான் சந்தி முதல் பொன்னாலை - பருத்தித்துறை வீதி வரையிலான பலாலி வீதி கடுமையான நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன் 35 ஆண்டுகளுக்குப் பின்னர் மக்கள் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.**

**இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தின் ஊடாகச் செல்லும் சுமார் 2.5 கிலோ மீற்றர் நீளமான குறித்த வீதி கடந்த 1990ஆம் ஆண்டு முதல் மக்கள் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்தது.**


அதனால் யாழ்ப்பாணத்தில் இருந்து பலாலி வடக்கு பிரதேசத்துக்குச் செல்லும் மக்கள் காங்கேசன்துறை சென்று அங்கிருந்தே பலாலி வடக்குக்குச் செல்லும் நிலைமை காணப்பட்டு வந்த நிலையில் குறித்த வீதியின் ஊடாகப் போக்குவரத்துக்கு அனுமதிக்குமாறு போர் நிறைவடைந்த காலம் முதல் சுமார் 15 வருட காலமாக மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் குறித்த வீதி இன்று வியாழக்கிழமை முதல் பல்வேறு நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன் மக்கள் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்பட்டப்பட்டுள்ளது.

இந்த வீதி ஊடாக காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை மாத்திரமே மக்கள் பயணிக்க முடியும்.

வீதியில் பயணிப்பவர்கள் வீதியின் இடையில் வாகனத்தை நிறுத்துதல், வாகனங்களைத் திருப்புதல், பயண நேரத்தில் புகைப்படம், காணொளி எடுத்தல் ஆகிய நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நடை பயணம் செல்வதற்கும், பஸ் தவிர்ந்த பாரவூர்திகள் குறித்த வீதியூடாகச் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.




மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வேகத்தில் மாத்திரமே பயணிக்க வேண்டும் என்றும், சாரதிகளுக்கான அடையாள ஆவணங்கள் கட்டாயம் வைத்திருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான கட்டுப்பாடுகளை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனும் அறிவுறுத்தல் பதாகை வீதியில் தமிழ் மொழியில் எழுதிக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு வெள்ளிக்கிழமை பிரதமர் ஹரிணி அமரசூரிய விஜயம் மேற்கொண்டு பல்வேறு இடங்களில் மக்கள் சந்திப்புக்களில் கலந்துகொள்ளவுள்ள நிலையில் இன்று இந்த வீதி திறக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.








# அச்சுவேலி கூட்டுறவுச் சங்கக் காணியும் விடுவிப்பு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயக் கட்டடம் மற்றும் அதனைச் சூழவிருந்த சுமார் 8 பரப்புக் காணி இன்று இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 30 வருடங்களுக்கு மேலாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த குறித்த காணி மற்றும் அதனுள் இருந்த கட்டடம் என்பவற்றை வலிகாமம் கிழக்கு பிரதேச செயலரிடம் இராணுவத்தினர் இன்று உத்தியோக பூர்வமாகக் கையளித்த நிலையில், பிரதேச செயலரால் அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளரிடம் கையளிக்கப்பட்டது.

இதுவரை காலமும் மாற்றிடம் ஒன்றில் தலைமைக் காரியாலயம் இயங்கி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



# மோட்டார் சைக்கிள் மோதி சுத்திகரிப்புத் தொழிலாளி மரணம்!

(ராமு தனராஜா)

மோட்டார் சைக்கிள் மோதியதில் சுத்திகரிப்புத் தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பதுளை, பண்டாரவளை வீதியில் பண்டாரவளை தம்ரோ காட்சியகத்துக்கு முன்பாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பண்டாரவளை மாநகர சபையில் பணியாற்றும் 36 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் சுத்திகரிப்பு தொழிலில் ஈடு



பட்டுக்கொண்டிருந்த வேளையிலேயே அவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

படுகாயமடைந்த அவர், தியத்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பிறகு உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த 19 வயது இளைஞரும் காயமடைந்துள்ளார். அவர் தியத்தலாவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்து தொடர்பில் பண்டாரவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



விடா முயற்சி விஸ்வரூப வெற்றி
பிரபல தென்னிந்திய பாடகர்
அந்தனி தாசனுடன்
Sawadeeka
MEGA
MUSICAL NIGHT
அதிரடி இசைக் கொண்டாட்டம்
ஏப்ரல் 12
இரவு 07.00
அனுமதி இலவசம்
வல்வெட்டித்துறை
ரேவடி கடற்கரையில்
ஏற்பாட்டு உதவி
யாழ்ப்பாண கபடி சங்கம்
வாழ்வை விளையாட்டு கழகம்.
Media Sponsors

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சட்ட விரோதக் கட்டுப்பாடு

வடக்கில் உயர் இராணுவப் பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்த வசாவிளான் - பலாலி வீதி, 34 வருடங்களாக மூடப்பட்டிருந்த நிலையில் இன்று காலை முதல் திறக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த வீதியினூடாகப் போக்குவரத்து நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மக்களின் நீண்ட காலப் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி இதுவெனினும், இந்த வீதித் திறப்பை ஒட்டி, சட்டத்துக்கு மீறிய தனது இராணுவ மேலாதிக்கத்தை - இராணுவப் பிடியை - இந்த வீதி திறப்பு விடயத்திலும் இலங்கைப் படைகள் கைவிடவில்லை.

இந்த வீதி திறக்கப்பட்ட போதிலும் அந்தப் பாதையை பயன்படுத்துவதற்கான சட்டவிரோதத் தடைகள் தொடர்ந்து நீடிக்கின்றன. இந்த வீதியை இவ்வளவு காலமும் மூடி வைத்திருந்ததே சட்ட விரோதமான நடவடிக்கைதான். அப்படி வீதியை மூடுவதற்கான சட்ட ஏற்பாடுகள் எவையும் இல்லை. சட்டத்திற்கு முரணான வகையில்தான் அந்த வீதி இவ்வளவு காலமும் இராணுவத்தினால் வல்வந்தமாக ஆக்கிரமிக்கப்பட்டு மூடப்பட்டிருந்தது. இப்போது அதைத் திறந்து விட்டு, அதற்குச் சட்டவிரோதமான கட்டுப்பாடுகளையும் விதித்திருக்கிறது இலங்கை இராணுவம்.

இந்த வீதியூடாக நடந்தோ, சைக்கிளிலோ பயணிக்க முடியாது. வாகனங்களில்தான் செல்ல வேண்டும். பஸ் தவிர்ந்த வேறு பாரஊர்திகள் பயணிக்க முடியாது. வீதியில் இடையில் வாகனங்களை நிறுத்துதல், திருப்புதல், பயண நேரத்தில் படம் எடுத்தல், காணொளி எடுத்தல் ஆகியவற்றுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆகக் கூடியது மணித்தியாலத்திற்கு 40 கிலோ மீற்றர் வேகத்தில் மாத்திரமே செல்ல முடியும். சாரதிகளுக்கான ஆளடையாள ஆவணங்கள் கட்டாயம். அதுவும் காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை மாத்திரமே இந்த அனுமதி.

இந்தக் கட்டுப்பாடுகளை விதித்திருக்கும் இராணுவம் இந்த விதிமுறைகளை மீறுவது சட்ட விரோதம் என்று அறிவித்திருப்பது தான் வேடிக்கையிலும் வேடிக்கை. சட்டவிரோதமான வகையில் வீதியை இவ்வளவு காலமும் மூடி வைத்திருந்த இராணுவம், இப்போது அதைப் பகுதியளவில் கட்டுப்பாடுகளுடன் திறந்து விட்டு விட்டு, சட்டவிரோதமான அந்தக் கட்டுப்பாடுகளை மீறுவது சட்ட விரோதம் என்று அறிவிப்பது விநோதத்திலும் விநோதம்.

இந்தச் சட்டவிரோத நடவடிக்கை தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் எழுப்பியுள்ள கேள்விகள் கவனிக்கத்தக்கவை.

‘‘இது சட்டத்தால் பிரகடனம் செய்யப்பட்ட ‘உயர் பாதுகாப்பு வலயம்’ அல்ல. மாலை 6 மணியிலிருந்து காலை 5 மணி வரை இதை மூடுவதற்கும், எவரும் நடந்து செல்வதை தடுப்பதற்கும் எந்தச் சட்டம் அதிகாரம் கொடுத்தது? தேர்தல்கள் நெருங்கும் போது மட்டும்தான் இப்படிப் பாதைகளைத் திறப்பீர்களா?’’ - இதுதான் அந்தக் கேள்விகள்.

சட்ட விரோத நடவடிக்கையில் சில சலுகைகளைச் செய்திருக்கின்றார்கள்.

இராணுவத்தின் இந்தத் தொடர் அத்துமீறலை சவாலுக்கு உட்படுத்துவது எப்படி என்பது அவருக்குத் தெரியும். அதை அவர் முன்னெடுக்க வேண்டும்.


tamil one TV HD
சித்திரை
கோடைத்திருவிழா
2025
வட மாகாண ஆண், பெண்
அணிகளுக்கான கபடி போட்டிகள்,
சுவாரஸ்யமான சித்திரை விளையாட்டு போட்டிகள்,
மற்றும் அதிரடி இசை நிகழ்ச்சி!
இடம்
வல்வெட்டித்துறை
ரேவடி கடற்கரை
ஏப்ரல் 12
Beach கபடி முதல் சுற்றுப்போட்டிகள்
ஏப்ரல் 12 - இரவு 07:00 மணிக்கு
தென்னிந்திய பாடகர்களுடன்
மாபெரும் இசை நிகழ்சி
ஏப்ரல் 13 - காலை 06:00 - மாலை 06:00
ஆண், பெண் கபடி இறுதி போட்டிகள்
பாரம்பரிய மற்றும் சுவாரஸ்யமான சித்திரை விளையாட்டு போட்டிகள்
கோடை திருவிழாவை கொண்டாட
அனைவரையும்
வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரைக்கு
அன்புடன் அழைக்கிறோம்!
ஏற்பாட்டு உதவி
யாழ்ப்பாண கபடி சங்கம்
வாழ்வை விளையாட்டு கழகம்.
Media Sponsors
சக்தி
VIRAKESARI வீரகேசரி
tamil one TV
a one
முரசு

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



## தேசிய காங்கிரஸ் கட்சியின் மூதூருக்கான கலந்துரையாடல்

(முஹம்மது ஜிப்ரான்)

மூதூர் பிரதேச சபை தேர்தலுக்கான தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக போட்டி யிடும் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்க ளுக்கான கூட்டமானது கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களின் பங்கேற் புடன் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மூதூர் தேசிய காங் கிரஸ் அமைப்பாளர் டாக்டர் சியா மற்றும் தேசிய காங்கிரசின் மத்திய குழு தலைவர் நிஹார் மற்றும் வேட்பாளர்கள் அத்துடன் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் போதும் வேட்பாளர்க ளின் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர் பான கலந்துரையாடல் மேற்கொள் ளப்பட்டது.இன்னும் பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

## மட்டக்களப்பு முழுமையாக அபிவிருத்தியடையவில்லை!

### இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் சுதர்சன்!

(பழுவூரான், மட்டு.துஷாரா, அபு அலா)

எமது மட்டு. மாநகர அபிவிருத்தி வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டுமாக இருந்தால் உள்ளூராட்சித் தேர்தலில் மாநகர சபையின் அதிகாரங்களை எமது வட்டார மக்கள் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு வழங்க வேண்டும். இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு 11 ஆம் வட்டார பெரிய உப்போடை, சின்ன உப்போடை, சீலாமுனை வட்டார வேட்பாளர் த.நடராசா சுதர்சன் தெரிவித்தார்.

சீலாமுனை பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கிராமங்களையும், நகரங்களையும் சிறந்த திட்டங்களுடன் அபிவிருத்தி செய்வதுடன், மக்களுக்கு திருப்திகர



மான சேவைகளை பெற்றுக் கொடுப்பதே எனதும், எமது கட்சியினதும் இலக் காகும்.

ஊழல், லஞ்சம், வீண்விரயம், அதி கார துஷ்பிரயோகமின்றி தூய்மை யானதும், நேர்மையானதுமான அரசியல் பணிகளை மேற்கொள்ளவ தையேஎமதுமக்கள்எதிர்பார்க்கின்றனர்.

நீங்கள் எதிர்பார்க்கும் அனைத் தையும் நான் செய்வேன் என்பதை மிக ஆணித்தரமாக எமது மக்களுக்கு செல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மட்டக்களப்பு மாநகர சபைப் பகுதி யைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை எமக்குள்ளது. எமது மாநகரம் இன்னும் முழுமையாக அபிவிருத்தியடைய வில்லை. இதனை முழுமையடையச் செய்வதாக இருந்தால் எமது கட்சியின் கையில் ஆட்சி அதிகாரம் வரவேண்டும் என்பதை நீங்கள் புரிந்து கொண்டு வேறு யாருக்கும் இடமளிக்காமல் எமது கட்சியின் சின்னமான வீட்டுச் சின்னத்துக்கு நீங்கள் வாக்களிக்க வேண்டும்.

இம்முறைத் தேர்தலிலும் எமது மாநகர சபையை இலங்கை தமிழரசுக் கட்சி கைப்பற்றும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

இந்த வெற்றி ஒரு சாதாரண வெற்றியன்றி வரலாறு காணாத வெற்றியாக அமையவேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஓரணியின் கீழ் திரள வேண்டும் .– என்றார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# மாம்பழச் சின்ன சுயேச்சை அணியுடன் இணைந்து செயற்படவுள்ளனர் மக்கள்

(அபு அலா )

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பில் களமி றங்கியுள்ள சம்மாந்துறை வேட்பாளர் களில் சிலர், நாபீர் பௌண்டேசன் மாம்பழச் சின்ன சுயேட்சை அணியுடன் இணைந்து செயற்படுவதற்கான முஸ் தீபுகள் இடம்பெற்றுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

சம்மாந்துறை பிரதேச சபை சார்பாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் களமிறக்கப்பட்டுள்ள வேட்பா ளர்களுக்கும், அந்தப் பிரதேச அமைப் பாளருக்கும் இடையில் இடம்பெற்ற கருத்து முரண்பாடுகள் காரணமாக முக்கிய நான்கு வட்டாரங்களின் வேட் பாளர்கள் மாம்பழச் சின்ன சுயேட்சை குழு அணியில் இணைந்துள்ளனர்.

சம்மாந்துறை பிரதேச சபையை முன்னெடுத்துச் செல்லக்கூடிய சிறந்த வளங்கள் இருந்தும் அதனை ஆட்சி செய்தவர்கள் அந்தப் பிரதேச மக்களின் அபிலாசைகளையும், சிறந்த அபிவி



ருத்தித் திட்டங்களையும் நிறைவேற்றும் விதத்தில் உபயோகப்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டுக்களை அந்தப் பிரதேச புத்திஜீவிகளும், துறைசார்ந்த வர்களும், உலமாக்களும் குறிப்பாக பொதுமக்களும் இந்தக் கருத்தை முன்வைத்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் சம்மாந்துறை பிரதேச சபையை ஆட்சி செய்தவர்களின் கையில், இந்த முறை ஆட்சி அதிகா ரத்தை நாம் வழங்காமலும், சந்தர்ப்ப வாதிகளின் பின்னால் செல்வதையும் நிறுத்திவிட்டு ஊர்பற்றி சிந்திக்கும் ஒருவரான நாபீர் பௌண்டேசனின் சுயேட்சை குழுவான மாம்பழச் சின்ன அணியை பலப்படுத்தி அவர்களின் கையில் சம்மாந்துறை பிரதேச சபையை வழங்குவோமென்ற ஒருமித்த முடி வையும் அப்பிரதேச மக்கள் எடுத்துள் ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொய்ப் பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றது; ஆதரவாளர் விழிப்புடன் இருக்க வேண்டும்!

## ஈ.பி.டி.பியின் மாவட்ட நிர்வாக செயலாளர் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நெருங்கி வருகின்ற நிலையில், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாக செயலாளர் என்ற அடிப்படையில் சில விடயங்களை எமது மக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாக செயலாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் செய்திக் குறிப் பொன்றை விடுத்துள்ளார் .

குறித்த செய்திக் குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளவை வருமாறு,

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எமது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, யாழ். நிர்வாக மாவட்டத்துக்கு உட்பட்ட 17 உள்ளூராட்சி மன்றங்களி லும் எமது வீணைச் சின்னத்தில் களம் இறங்கியுள்ளது.

அதேவேளை, கடந்த காலங்களில் எமது கட்சியிலிருந்து வெளியேறிய, வெளியேற்றப்பட்ட சிலர் ஏனைய சில கட்சிகளிலும் சுயேற்சைக் குழுக்கள் சார்பாகவும் நடைபெறவுள்ள உள்ளூ ராட்சி மன்ற தேர்தலில் வேட்பாளர்களாக களம் இறங்கி யிருக்கின்றனர்.

அவ்வாறானோர் எமது கட்சியில் இணைந்திருந்து செயற்பட்ட காலத்தில் கட்சியாலும் எமது செயலாளர் நாய கத்தாலும் முன்னெடுக்கப்பட்ட மக்கள் நலன்சார் திட்டங்களையும் அபிவிருத்தி திட்டங்களையும் தங்களின் சாதனை களாக தற்போது மக்கள் மத்தியில் பிரசாரப்படுத்தி வருகின்றனர் என்று எமது ஆதரவாளர்களால் எமது கவ னத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதைவிட, வலி கிழக்கு பிதேச சபையில் போட்டியிடும் சுயேட்சைக் குழு ஒன்று, தம்மை ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சி என்றும் தந்திரோபாய காரணங்களுக்காக சுயேட்சை அணி யாக போட்டியிடுவதாகவும் பொய்யான பிரசாரங்களை முன்னெடுத்து வருவதை அறியமுடிகிறது.

இவ்வாறான பிரசாரங்கள் தொடர் பாக எமது மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். எமது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியையும் எமது செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தாவின் வேலைத் திட்டங் களை ஆதரித்து அங்கீகரிப்பவர்களும், உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக எமது நடைமுறைச் சாத்தியமான செயற்பா டுளை எதிர்பார்ப்பவர்களும், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போலிகளை கண்டு ஏமாறக் கூடாது.

எமது சின்னமான வீணைச் சின்னத்துக்கு மாத்திரமே வாக்களிக்க வேண்டும் என்பதை வினயமாக அறியத் தருகின்றேன்.– என்றுள்ளது.







# சமுர்த்தி அபிமானி வர்த்தக கண்காட்சியும் விற்பனையும்

**(றிஸ்வான் சாலிஹு)**

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக சமுர்த்தி பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட “சமுர்த்தி அபிமானி” வர்த்தக கண்காட்சியும் விற்பனையும் அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர் றாசீத் யஹ்யா தலைமையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றன.

அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் என்.எம்.நௌபீஸ் இந்தக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். இந்தப் பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி பயனாளிகளால் தயாரிக்கப்பட்ட பொருள்கள் இக்கண்காட்சியின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கணக்காளர், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி பயனாளிகளும் கலந்து கொண்டனர்.



# புத்தளம் வலய ஏற்பாட்டில் அதிபர், ஆசியர் கௌரவிப்பு

**(உடப்பு க.மகாதேவன்)**

புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரி அஸ்வர் மண்டபத்தில் புத்தளம் வலயக் கல்வி பணிமனையின் ஏற்பாட்டில், அதிபர், ஆசியர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

வடமேல் மாகாண கல்விப்பணிப்பாளர் பிரதம அதிதியாக கலந்துக் கொண்ட இந்த நிகழ்வில், புத்தளம் வலயத்தில் இருந்து தேசிய மட்ட இடங்களைப் பெற்ற போட்டிகளில் 75 பொறுப்பாசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் 2024 ஆம் ஆண்டு இடம் பெற்ற 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த சித்தி வீதம் பெற்ற 65 பாடசாலை அதிபர்களும், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த சித்தி வீதம் பெற்ற 32 பாடசாலை அதி பர்களும், க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த சித்தி வீதம் பெற்ற 49 பாடசாலை அதிபர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த 49 பாடசாலைகளில் உடப்பு தமிழ் மகா வித்தியாலயமும் கௌரவிக்கப்பட்டது. அதற்குரிய விருதை அதிபர் பூ.சுகந்தன் பெற்றுக் கொண்டார்.



மற்றும் புத்தளம் கல்வி வலயத்தின் வலயக் கல்விப்பணிப்பாளர் அர்ஜுன தலைமையில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் இந்த நிகழ்வை ஏற்பாடு செய் திருந்தனர்.



# பனைசார் பெண் கைப்பணியாளர்களை உருவாக்கும் நோக்கில் விசேட பயிற்சி

(த.சுபேசன்)

நாட்டில் 5000 இற்கும் மேற்பட்ட பெண் பனைசார் கைப்பணியாளர்களை உருவாக்கல் மற்றும் பனை சார் உற்பத்திகளை அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் எதிர்பார்ப்பிலும், பனை அபிவிருத்திச் சபையானது ஜி.ஐ.இசற். நிறுவனத்துடன் இணைந்து 10 நாள் பனம் கைப்பணி பயிற்சி நெறி ஒன்றை யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்திருந்தது.

இந்தப் பயிற்சி நெறியில் இந்தியா மற்றும் பங்களாதேஷ் நாடுகளைச் சேர்ந்த வளவாளர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கியிருந்தனர்.

பயிற்சி நெறியில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ். மாவட்டங்களைச் சேர்ந்த பனை அபிவிருத்திச்சபையின் போதனாசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் என 40 பேர் கலந்து கொண்டு பயனடைந்திருந்தனர்.

இதன்போது முதற்தடவையாக பனம் தும்பால் பனை சார் உற்பத்திப் பொருள்களைச் செய்வதற்கான பயிற்சி, பனை ஓலையால் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் உற்பத்திகளை மேற்கொள்வது தொடர்பான விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டது.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் வி.சகாதேவன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி பயிற்சி நெறியின் இறுதிநாள் நிகழ்வில் கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகர் கலந்து கொண்டு பனை சார் உற்பத்திகளை பார்வையிட்டதுடன் தொடர்ந்தும் இவ்வாறான முயற்சிகளை மேற்கொள்ள ஊக்குவித்துடன் இவ்வாறான பயனுள்ள செயற்பாடுகளை முன்னெடுக்கும் பனை அபிவிருத்திச்சபைத் தலைவருக்கு பாராட்டுக்களையும் தெரிவித்திருந்தார்.


பனை அபிவிருத்திச் சபையும் ஜி.ஐ.இசற். நிறுவனமும் கடந்த 2024 ஆம் ஆண்டு தொடக்கம் 9 மாத காலமாக பனம் கைப்பணி பயிற்சி நெறியை வழங்கி வரும் அதன் ஓர் அங்கமாக 10 நாள்கள் விசேடமாக பயிற்சியாளர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


பத்து நாள் பயிற்சியை பங்களாதேஷ் நாட்டில் இருந்து வருகைதந்த மொகமெட் ஜானுஸ் அலி மற்றும் இந்தியாவின் தமிழ் நாட்டில் இருந்து வருகைதந்த யூலிட் டயானா ஆகியோர் வழங்கியிருந்தனர்.

இந்தப் பயிற்சி நெறி ஊடாக ஏனைய மாவட்டங்களுக்கு பனம் கைப்பணிப் பயிற்சியை விஸ்தரிப்பதற்கும், பனை சார்ந்த உற்பத்திகளை அதிகரித்து அதனை ஏற்றுமதி செய்வதன் ஊடாக வருமானத்தை ஈட்டவும் அதேநேரம் தொழிலாளர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்தவும் பனை அபிவிருத்திச்சபை திட்டமிட்டுள்ளது.






EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# பொது மக்களின் போக்குவரத்துகளுக்கு தடை செய்யப்பட்டுள்ள வீதியால் சிரமம்!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தை ஒட்டிய வைத்தியசாலை வீதியையும் நீதிமன்ற வீதியையும் இணைக்கும் 150 மீற்றர் நீளமான சிறுபாதை திங்கட்கிழமை முதல், பொதுமக்கள் போக்குவரத்து செய்ய முடியாத வகையில் மூடப்பட்டுள்ளது.

வைத்தியசாலை நிர்வாகத்தால் இந்தப் பாதை மூடப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி வாழ் மக்கள் கூறுகின்றனர்.

ஜப்பானிய உதவித் திட்டத்தின் கீழ் இந்தப்பாதை உள்ளிட்ட வைத்தியசாலை வளாகத்தில் விசேட இருதய சத்திர சிகிச்சை மற்றும் ஆய்வுக்கான மருத்துவக் கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளது என திட்டம் தொடர்பான அறிவித்தல் பலகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மூடப்பட்ட பாதைக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள அறிவிப்புப் பலகையில் ஜப்பானிய பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கு இணங்க பாதை மூடப்படுகிறது என்ற அறிவிப்பும் உள்ளது.

இதேவேளை இந்தச் சிறு பாதை ஊடாகவே 70 ஆண்டுகளுக்கு அதிக காலம் பயணித்து, நீதிமன்ற வீதியின் மனையாவெளி மற்றும் செபஸ்தியார் புரம் (புல்லுத்தோட்டம்) பகுதிகளில் உள்ள மீனவர்கள் வைத்தியசாலை வீதிக்கு சென்று அங்கிருந்து டைக் வீதியைக் கடந்து கடலுக்கு சென்று வந்தனர். தற்போது இப்பாதை மூடப்பட்டுள்ளதால் தாம் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகி உள்ளனர் என்று இந்தப் பிரதேச மீனவர் சங்கத் தலைவர் பியால் கவலை தெரிவித்தார்.

# இளையோரின் தொழில் தகைமைகளை வலுப்படுத்துவதற்கு விசேட பயிற்சிகள்

(எஸ். நிதர்ஷன்)




சர்வதேச தொழில் சந்தையில் காணப்படும் போட்டி நிலைக்கு ஏற்ப யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர் யுவதிகளின் தொழில் தகைமைகளை வலுப்படுத்தி சான்றிதழ் வழங்கும் நோக்கில் இலங்கையின் தொழில் பயிற்சி தொழில் வாய்ப்பு வழங்கும் நிறுவனமான ஐ.எஸ்.டி. சர்வதேச நிறுவனம் புதிய நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்க களம் இறங்கியுள்ளது என்று அதன் நிர்வாக அதிகாரிகள் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

யாழ் ஊடக அமையத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் ஏற்கனவே பயிற்சி பெற்று இளைஞர்களின் தொழில் நிபுணத்துவ தரத்தை உறுதி செய்யும் நிறுவனங்கள் இரண்டு இருக்கின்றன. ஆனாலும் அவற்றின் ஊடாக பயிற்சி பெற்று வெளியேறும் இளைஞர்களிடம் அந்த தொழிலின் நிபுணத்துவம் உலக சந்தையின் கேள்விக்கேற்ப போதுமானதாக இல்லாத நிலை காணப்படுகின்றது.

இதனால் உலக நாடுகளுக்கு இலங்கையில் இருந்து செல்லும் தொழிலாளர்கள் அந்த நாடுகள் எதிர்பார்க்கும் திறமைகளை வெளிக்கொணரும் அற்றல் குறைந்தவர்களாக இருக்கும் சூழல் உருவாகின்றது.

இதனால் உலக நாடுகள் இலங்கையின் தொழிலாளர்களை தமது நாடுகளுக்கு அழைப்பதை நிறுத்தும் நிலையும் காணப்படுகின்றது.

இந்த நிலையில்தான் குறித்த தொழில் பயிற்சி தொழில் வாய்ப்பு வழங்கும் நிறுவனமான இந்த நிறுவனம் இலவசமாக உலக நாடுகள் எதிர்பார்க்கும் கேள்விக்கேற்ற தொழில் வல்லுநர்களை அடையாளப்படுத்தி பயிற்சிகளை இலவசமாக கொடுப்பதற்கான முயற்சியை எடுத்துள்ளது.

தொடர்ச்சி▼

# இளையோரின்....

தொடர்ச்சி▲

ஆனாலும் இந்த நிறுவனம் ஒரு வெளிநாட்டு தொழில் வாய்ப்ப முகவர் நிறுவனமாக ஒருபோதும் செயற்படாது.

ஆனால், இளைஞர்களின் தொழில் தரத்தை வலுப்படுத்தும் உந்து சக்தியாகவே இருக்கும்.

அதனடிப்படையில் எமது இந்த திட்டத்தின் கீழ் இளைஞர்களை தொழில் தேர்ச்சி உடையவர்களாக, அதற்கான சான்றிதழ்களை வழங்கல், அதற்கான சலுகைகளை பெற்றுக்கொடுத்தல், திட்டவரைபுகளை உருவாக்க உதவி செய்தல் போற்ற முயற்சிகளை முன்னெடுக்கவுள்ளது.

தற்போது உலக நாடுகளில் அதிக கேள்வியாக உள்ள தொழில் துறைகளில் இலங்கையின் இளைஞர்களை தேர்ச்சியாளர்களாக்கும் பயிற்சிகளை வழங்கி அதாற்கான சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர்கள் தம்மை ஈடுபடுத்தி நன்மைகளை பெற்றுக்கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 19 ஆம் மற்றும் 20 ஆம் திகதிகளில் இளைஞர்கள் யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்வு நடைபெறவுள்ளது.- என்று தெரிவித்தனர்.



# வலி வடக்கில் வட்டார வேட்பாளராக அப்பகுதி கிராம சேவையாளர் பெயர்

## தனக்கு எதுவுமே தெரியாது என்கிறார் அவர்

(ந.லோகதயாளன்)

வலி. வடக்கு பிரதேச சபை சார்பில் உள்ளூராட்சி சபையில் தனக்குத் தெரியாது தனது பெயர் இணைக்கப்பட்டுள்ளது என கிராம சேவகர் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

வலி. வடக்கு பிரதேச சபையில் ஐ.தே. கட்சி சார்பில் வித்தகபுரம் வட்டாரத்தில் போட்டியிடும் பெண் அதே வட்டாரத்தின் கிராம சேவையாளர் எனக் கண்டுகொள்ளப்பட்டபோது தான் எந்த வேட்பு மனுவிலும் ஒப்பமிடவில்லை எனவும், தனது அடையாள அட்டைப் பிரதியும் வழங்கவில்லை எனவும் பிரதேச செயலாளருக்கு அறிக்கையிட்டுள்ளமையோடு இது தொடர்பில் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் இன்றைய தினம் முறைப்பாட்டையும் பதிவு செய்துள்ளார்.

இது தொடர்பில் மாவட்டத் தேர்தல் செயலகம் தேர்தல்கள் ஆணைக் குழுவின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளது.

# திருமலை ஆதிபத்திரகாளி ரதோற்சவம்

திருகோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவ முத்தேர்த்திருவிழா இரதோற்சவம் இன்று காலை சிறப்பாக நடைபெற்றது.

வசந்த மண்டபப் பூஜை, அடுத்து அம்பாள் தேரில் ஆரோகணித்து, விநாயகரும், முருகனும் முன்னே செல்ல அம்பாள் தனக்கென அமைக்கப்பட்ட சித்திரத்தேரில் பவனி வந்து அடியார்களுக்கு அருளாசி வழங்குவதையும், பக்த அடியார்கள் அங்கப்பிரதட்சணை செய்து தேரின் பின்னே செல்வதையும் படங்களில் காணலாம்














# கிழக்கு ஆளுநரை சந்தித்தனர் பயிற்சி பாதுகாப்பு அதிகாரிகள்!

(அபு அலா )

தேசிய பாதுகாப்பு கல்லூரியில் பயிற்சி பெற்று வருகின்ற பாதுகாப்பு அதிகாரிகள் குழுவுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகரவுக்கும் இடையிலான சந்திப்பு திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

பாதுகாப்பு அதிகாரிகள் தங்களின் கற்கைக் காலத்தில் திருகோணமலை மாவட்டத்துக்கு மேற்கொண்ட களப் பயணத்தின் போதே கிழக்கு மாகாண ஆளுநருடன் ஒரு சந்திப்பை ஏற்படுத்தியிருந்தனர்.

இதன்போது, கிழக்கு மாகாணத்தில் நிலவும் சமூக மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆளுநர் ஜயந்த லால் ரட்ணசேகர விளக்கமளித்தார். மாகாணத்தில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் பாதுகாப்புத்துறை எந்தளவுக்குத் தலையிட வேண்டும் என்பது குறித்த கருத்துக்களையும் தெளிவுபடுத்தினார்.









# கோட்டைக்கேணி - பறையனாறு வரையான வீதிச் சீரமைப்புப் பணி விரைவில் ஆரம்பம்

## ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு

(பா.சதீசன்)

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் கோட்டைக்கேணி தொடக்கம், தென்னமரவடி பறையனாற்றுப் பாலம்வரையிலான வீதி சீரின்மையால் கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்கிளாய், தென்னமரவடி பகுதி விவசாயிகள் பெருத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் தொடர் கோரிக்கையை அடுத்து குறித்த வீதியை சீரமைக்கும் நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

அந்தப் பகுதி விவசாயிகளின் அழைப்பை ஏற்று குறித்த பகுதிக்குச் சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் விவசாயிகளோடு இணைந்து சீர்செய்யப்படவுள்ள வீதியைப் பார்வையிட்டிருந்தார். இதன்போது அந்தப் பகுதி விவசாயிகள் நாடாளுமன்ற உறுப்பினருக்கு நன்றி தெரிவித்தனர்.

இத்தகைய சூழலில் எல்லைக்கிராம விவசாயிகளின் நீண்டகாலப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதையிட்டு தாம் மகிழ்ச்சியடைகிறார் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளிலுள்ள ஆறு கிராம அலுவலர் பிரிவுகளிலும் உள்ள மக்களில் ஏறத்தாள 90 வீதமானோர் விவசாயத்தை நம்பியே வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் இந்தப் பகுதிகளிலுள்ள மக்களில் பெரும்பாலான விவசாயக் காணிகள் கடந்த கால இனவாத அரசுகளின் காலத்தில் பெரும்பான்மையின மக்களால் அபகரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக கடந்த 1984 ஆம் ஆண்டு இந்தப் பகுதிகளில் இருந்த தமிழ் மக்கள் இராணுவத்தினரால் கடந்த 1984 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வலுக்கட்டா யமாக வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு இராணுவத்தால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படும் போது, தற்போது பெரும்பான்மையின மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது பூர்வீக வயல் காணிகளில் நெற்செய்கை மேற்கொண்டிருந்ததாகவும், தம்மால் செய்கைபண்ணப்பட்ட நெல்லை அறுவடை செய்யாமலேயே தாம் அங்கிருந்து இடம்பெயர்ந்தனர்

தொடர்ச்சி▼

# கோட்டைக்கேணி...

**தொடர்ச்சி▼**

எனவும் அந்தப் பகுதித் தமிழ் மக்கள் தெரி விக்கின்றனர்.

இவ்வாறானதொரு பாரிய ஆக்கிரமிப்பு முற்றுகைக்குள் இருக்கும் இப்பகுதித் தமிழ் மக்கள், பலத்த போராட்டங்களுக்கு மத்தியில், ஆக்கிரமிப்பிலிருந்து தப்பியுள்ள தமக்கு உரிய பூர்வீக மானவாரி நெற்செய்கை நிலங்களில் நெற்பயிற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக சிவந்தாமுறிப்பு, வெள்ளைக்கல்லடி, எரிஞ்சகாடு, சகலாத்து வெளி, நாயடிச்சமுறிப்பு, இறம்பை வெளி, மேல்காட்டுவெளி, கொக்கு மோட்டை, பாலங்காட்டுவெளி, கீழ்காட்டு வெளி, ஆத்திமோட்டைவெளி, காயா மோட்டை வெளி, கன்னாட்டி, குறிஞ்சாடி, பெரிய வெளி, பணிக்கவயல், அக்கர வெளி, மாரியாமுனை உள்ளிட்ட பூர்வீக மானா வாரி விவசாய நிலங்களில் தமிழ்மக்கள் பலத்த போராட்டங்களுக்கு மத்தியில் நெற்பயிற்செய்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இந்த பயிர் நிலங்களுக்கு சென்று வருவதற்காக தமிழ் மக்கள் பயன்படுத்தும் வீதி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுக் காணப்படுகின்றது.

எனவே நெற்பயிற்செய்கை காலத்தில் விவசாய உள்ளீடுகளை எடுத்து வருவதிலும், அறுவடைக்காலத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை எடுத்துச் செல்வதிலும் இப்பகுதி விவசாயிகள் பலத்த இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர்.

இத்தகைய சூழலில் குறித்த வீதியை சீரமைத்துத் தருமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தார்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், வடமாகாண ஆளுநர் ஆகியோரிடமும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இந்த வீதி சீரமைப்பு தொடர்பில் வலியுறுத்தியிருந்தார்.

இதனையடுத்து முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், வடமாகாண ஆளுநர் ஆகியோர் குறித்த இடத்திற்கு விஜயம் மேற்கொண்டு நிலமைகள் தொடர்பில் பார்வையிட்டிருந்தனர்.

இத்தகைய சூழலில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் தொடர்ச்சியான கோரிக்கைக்கு அமைவாக ஆக்கிரமிப்பு முற்றுகைக்குள் இருக்கும் எல்லைக் கிராமத் தமிழ் மக்களின் வயல் நிலங்களுக்குச் சென்று வருவதற்கு உரிய ஏறத்தாள 16 கிலோ மீற்றர் தூரமான வீதியைச் சீரமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த வீதிச் சீரமைப்பு விடயத்தில் கரிசனையோடு செயற்பட்ட வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், முல்லைத் தீவு மாவட்டச் செயலாளர் அ.உமா மகேஸ்வரன் ஆகியோருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நன்றி தெரிவிக்கப்பட்டது.



# மன்னார் சுகாதார அதிகாரி பிரிவில் உணவகங்களில் திடீர் சோதனை!

(மன்னார் நிருபர்)

மன்னார், பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வந்த இரு உணவகங்களுக்கு எதிராக மன்னார் நகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரூபன் லெம்பேட் தலைமையில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அத்தோடு, அவற்றில் ஒரு உணவகம் தற்காலிகமாக சீல் வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக மன்னார் உப்புக்குளம் - பள்ளிமுனை பிரதான வீதியில் அமைந்துள்ள குறித்த இரு உணவகங்களுக்கும் திடீரெனச் சென்ற மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது அந்தப் பகுதியில் உள்ள ஒரு உணவகத்தில் குறித்த குழுவினர் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன்போது குறித்த உணவகத்தில் கடமையாற்றியவர்கள் சுகாதார பரிசோதனை சான்றிதழ் பெற்றுக் கொள்ளாமல் கடமையாற்றியமை, குளிர்சாதனப் பெட்டியில் சுகாதாரமற்ற முறையில் உணவுப் பொருள்



களை சேகரித்து வைத்தமை, உணவுப் பொருள்களை சுகாதாரம் இன்றிப் பாதுகாப்பற்ற முறையில் தயாரித்தமை உள்ளிட்ட சில குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த நிலையில், குறித்த உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. உடனடியாக குறித்த குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அறிவுறுத்தப்பட்டது.

மேலும் அப்பகுதியில் உள்ள மேலும் ஒரு உணவகம் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அந்த உணவகத்தில் பல்வேறு பிரச்சினைகள் சுகாதார அதிகாரிகளால் கண்டு பிடிக்கப்பட்டன.

அந்த உணவகத்தில் சுகாதாரமற்ற முறையில் உணவு தயாரித்தல், உரிய முறையில் கழிவு நீர் வடிகான் பராமரிக்கப்படாமை, கழிவுநீர் தொட்டியில் நுளம்பு பெருகும் வகையில் வைத்திருந்தமை உள்ளடங்களாக பாரிய சுகாதார சீர் கேடுகளுடன் குறித்த உணவகம் இயங்கி வந்தமை அதிகாரிகளால் கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த உணவகம் தற்காலிகமாக சீல் வைத்து மூடப்பட்டுள்ளது. உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராகவும் மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எதிர்வரும் பண்டிகைக் காலங்களை முன்னிட்டு மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள உணவகங்களில் தொடர்ச்சியாக திடீர் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மக்கள் விழிப்புடன் இருக்குமாறும் சுகாதார முறையில் உணவுப் பொருள்களைக் கையாளும் உணவகங்களில் உணவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் சுகாதார துறையினர் மக்களுக்கு அறிவுறுத்தி உள்ளனர். சுகாதாரமற்ற முறையில் உணவுப் பொருள்களைக் கையாளும் உணவகங்கள் தொடர்பாக முறை யிடுமாறும் சுகாதார துறையினர் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







# கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு திறந்து வைப்பு

வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் கோப்பாய் பிரதேச வைத்தியசாலை முக்கியத்துவம் மிக்க அமைவிடத்தில் உள்ளது. இதன் முக்கியத்துவத்தையும் தேவையையும் அதிகரிக்கின்றது. இதனைக் கருத்தில் கொண்டு அவசர சிகிச்சைப் பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண போதனா வைத்திய சாலையில் இருந்து எட்டு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருப்பதால் யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு துணையாக செயற்படக் கூடிய தன்மை கொண்டதாகவும் யாழ்பாண வைத்திய சாலையில் பணிபுரிந்து இடமாற்றம் பெற்ற மூத்த சிரேஷ்ட வைத்திய அதிகாரிகள் பணிபுரியும் இடமாகவும் இது உள்ளது.

மயிலிட்டியில் காசநோய்க்கான சிகிச்சை வழங்கிய வைத்தியசாலை யுத்தகாலத்தில் மூடப்பட்டபின் கோப்பாய் பிரதேச வைத்தியசாலையிலேயே இன்றுவரை அப்பிரிவு இயங்கிவருகிறது.

இத்தகைய சிறப்புமிக்க வைத்திய சாலையில் அவசரசிகிச்சைப் பிரிவு ஒன்றின் தேவை பற்றி கலந்துரையாடப்பட்டு அதற்கான உதவி அமெரிக்க அனைத்துலக மருத்துவ நல அமைப்பிடம் (ஐ.எம்.எச்.ஓ) கோரப்பட்டது.

இதன் விளைவாக 6 மாத காலப் பகுதிக்குள் அவசர சிகிச்சைப்பிரிவு புனரமைக்கப்பட்டு உபகரணத் தொகுதிகள், அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் (ஐ.எம்.எச்.ஓ.-அமெரிக்கா) தலைவி டாக்டர் இராஜம் தெய்வேந்திரன் அம்மையாரால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

ஐ.எம்.எச்.ஓ. தலைமை செயலணி உறுப்பினர் டாக்டர் தெய்வேந்திரன், மாகாண சுகாதார பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன், ஐ.எம்.எச்.ஓ. வதிவிட பிரதிநிதி முத்து இராதாகிருஷ்ணன், ஐ.எம்.எச்.ஓ இணைப்பாளர் ஜி. கிருஷ்ண குமார் , துஷாந்தன், மற்றும் கோப்பாய் பிரதேச வைத்திய அதிகாரி டாக்டர்.சிவகோணேஸ்வரன், மற்றும் வைத்தியசாலை நலன்புரிச்சங்கச் செயலாளர் ஏனைய மூத்த உறுப்பினர்கள், ஏனைய வைத்தியர்கள், தாதியினர் பொது மக்கள் நிகழ்வில் பங்குபற்றினர்.

இங்கு பேசிய டாக்டர் இராஜம், இலவசக் கல்வியின் மூலமாக தாம் அடைந்த வைத்திய தகுதியை இந்த நாட்டு மக்களுக்கு வழங்க வேண்டியே புலம்பெயர்ந்த நாடுகளில் தாம் பணி புரிந்த போதும் அனைத்துலக மருத்துவ நல அமைப்பை உருவாக்கி அதற் கூடாக இத்தகைய கைங்கரியங்களை செய்ய முடிகின்றது எனக்கூறினார்.

# சட்ட போராட்டத்தை தொடர்ந்தால் நீட் தேர்வில் விலக்கு பெறலாம்

## அனைத்து கட்சி கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் நம்பிக்கை

சட்ட போராட்டத்தை தொய்வின்றி தொடர்ந்தால், நீட் தேர்வில் இருந்து விலக்கு பெற முடியும் என்று நீட் தேர்வு தொடர்பான அனைத்து சட்டப்பேரவை கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நீட் தேர்வு முறையை அகற்றுவதற்கான சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பான அனைத்து சட்டப்பேரவை கட்சித் தலைவர்கள் கூட்டம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில், நேற்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் முதல்வர் உரையாற்றுகையில்,

"நுழைவுத் தேர்வு என்பது ஏழை எளிய கிராமப்புற மாணவர்களை பாதிக்கக் கூடியது. அதனால், அதை தவிர்த்து பள்ளிக் கல்வித் திறனை மட்டும் அடிப்படையாகக் கொண்டதாக கல்லூரி மாணவர் சேர்க்கை அமைய வேண்டும். ஆனால், சில ஆண்டுகளுக்கு முன், மத்திய அரசு மருத்துவ மாணவர் சேர்க்கையில், நீட் தேர்வை கொண்டு வந்தது. இது நம்முடைய மாணவர்களை வெகுவாக பாதிக்கிறது.

நுழைவுத் தேர்வுக்கான சிறப்பு பயிற்சிகளைப் பெறுவதற்கான வசதி வாய்ப்பு இருக்கும் மாணவர்களுக்கு மட்டுமே சாதகமாக இருப்பதுதான் நீட் தேர்வின் மாபெரும் அநீதி. இதற்கு எதிராக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 2021 முதல் சட்ட போராட்டத்தை தொடங்கினோம். நீட்தேர்வால்




பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை கண்டறிய ஓய்வு பெற்ற நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையில் ஒரு குழு அமைத்தோம். அக்குழு பரிந்துரைப்படி, அரசு செயலாளர்களை கொண்ட குழு நீட் விலக்கு சட்டத்தை உருவாக்க பரிந்துரை செய்தது.

தொடர்ந்து, நீட் தேர்வை ரத்து செய்யும் சட்டத்தை கடந்த 2021 செப்டெம்பர் 13 ஆம் திகதி நான் முன்மொழிந்தேன். அந்த சட்ட மசோதா ஆளுநருக்கு அனுப்பப்பட்டது. அவர் உடனடியாக குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல், அரசியல் செய்ய ஆரம்பித்தார். கடந்த 2022 பெப்ரவரி 1 ஆம் திகதி திருப்பியனுப்பினார், பெப்ரவரி 8 ஆம் திகதி மீண்டும் சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டு, குடியரசுத்தலைவர் ஒப்புதலுக்காக ஆளுநருக்கு அனுப்பப்பட்டது. ஆளுநரை நேரில் சந்தித்தும் வலியுறுத்தினேன்.


தொடர்ந்து, பிரதமர், உள்துறை அமைச்சரை சந்தித்து ஒப்புதல் அளிக்க வலியுறுத்தினேன். அனைத்து கட்சிகளின் எம்.பி.க்கள் குடியரசுத் தலைவர் அலுவலகத்தில் மனு அளித்தனர். இந்த தொடர் முயற்சிகளால், ஆளுநர் சட்ட மசோதாவை கடந்த 2022 மே 4 ஆம் திகதி குடியரசுத் தலைவருக்கு அனுப்பினார். அதன் பின், மத்திய அரசை வலியுறுத்தி குடியரசுத் தலைவர் ஒப்புதலை பெற முயற்சி எடுக்கப்பட்டது. இதுகுறித்து, மத்திய சுகாதாரத்துறை, உள்துறை, உயர்கல்வித்துறைகளுக்கு அனைத்து விளக்கங்களையும் அரசு உடனுக்குடன் வழங்கியது. ஆனால், அவற்றை ஏற்காமல், நீட் விலக்கு சட்டத்துக்கு ஒப்புதல் அளிக்க மறுத்துவிட்டனர். நேற்று முன்தினம் உச்ச நீதிமன்றத்தில் வெளியான தீர்ப்பு நமக்கு மாபெரும் நம்பிக்கையை கொடுத்து இருக்கிறது. நமது சட்ட போராட்டத்தை தொய்வின்றி தொடர்ந்தால், நீட் தேர்வில் இருந்து விலக்கு பெறமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது." என்றார்.


# மும்பை தாக்குதல் தீவிரவாதி ராணாவை இந்தியாவிடம் ஒப்படைத்தது அமெரிக்கா

2008 மும்பை பயங்கரவாதத் தாக்குதலில் இந்தியாவின் மிகவும் தேடப்படும் குற்றவாளிகளில் ஒருவரான தஹாவ்வூர் ஹுசைன் ராணா அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்டுள்ளார்.

இந்நிலையில், பாதுகாப்புப் படையினர் அடங்கிய இந்திய குழுவினரிடம் ராணா ஒப்படைக்கப்பட்டார். இதையடுத்து, இந்திய அதிகாரிகள் நேற்று ராணாவை சிறப்பு விமானத்தில் அழைத்துக் கொண்டு புறப்பட்டனர். அந்த விமானம் இன்று டில்லி வந்தடையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

பின்னர் டில்லி நீதிமன்றத்தில் அவர் ஆஜர்படுத்தப்படுவார். பின்னர் நீதிமன்ற உத்தரவின்படி சிறையில் அடைக்கப்பட உள்ளார். இந்நிலையில், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோர் நேற்று அவசர ஆலோசனை நடத்தினர். பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அவர்கள் ஆலோசித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.





இந்தியாவில், ராணா மீது குற்றவியல் சதி, இந்தியாவுக்கு எதிராகப் போர் தொடுத்தல், கொலை, மோசடி மற்றும் சட்டவிரோத தடுப்பு சட்டம் உள்ளிட்ட கடுமையான குற்றச்சாட்டுகள் உள்ளன.

இந்த நிலையில் அமெரிக்காவின் இந்த நாடு கடத்தல் பிரதமர் நரேந்திர மோடியின் இராஜதந்திரத்திற்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பாராட்டியுள்ளார்.

# அமெரிக்கா - சீனா இடையிலான வர்த்தக போர் தீவிரமடையும்

## பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை



சீனாவுக்கு எதிரான வரி உடனடியாக அமுலுக்கு வருவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ சமூக ஊடகப் பக்கத்தில் இதனைப் பதிவிட்டுள்ள அவர், எதிர்காலத்தில் சீனா, அமெரிக்காவின் நிலைப்பாடு ஏற்றுக் கொள்ளத்தக்கவை என்று உணரும் எனத் தாம் நம்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, உலகளாவிய வீழ்ச்சியின் காரணமாக தங்களின் கொள்கையில் மாற்றம் ஏற்பட வில்லை என அமெரிக்க திறைசேரி செயலாளர் ஸ்கொட் பெசென்ட் தெரிவித்துள்ளார்.

எனினும் ஜனநாயக கட்சியின் மூத்த உறுப்பினராக (ச்) சக் ஷூமர், அமெரிக்க ஜனாதிபதி பின்வாங்குவதாக விமர்சித்துள்ளார்.

அதேநேரம், அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தக போர் தீவிரமடையும் எனப் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மோசமடைவதால் அந்த நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் 80 சதவீதம் வரை வீழ்ச்சியடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இது உலக வர்த்தக அமைப்பின் கண்காணிப்பிற்கமைய, 466 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வீழ்ச்சியாகும்.

அமெரிக்காவின் வரி தொடர்பில் கருத்துரைத்துள்ள சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர், சீனா மீது துஷ்பிரயோகம் செய்யும் வகையில் அமெரிக்கா வரிகளை விதிப்பதாகக் குற்றஞ்சாட்டினார்.



# காசாவில் அடுக்கு மாடி கட்டடம் மீது இஸ்ரேல் தாக்குதல்; 23 வரை பேர் பலி

இஸ்ரேல் - காசா இடையிலான போர் நிறுத்தம் முடிவடைந்த நிலையில், காசாவில் நான்கு மாடி கட்டடம் மீது நடத்தப்பட்ட இஸ்ரேலிய விமானம் தாக்குதலில் 23 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தாக்குதலானது காசாவின் ஷிஜையா நகரில் உள்ள நான்கு மாடி கட்டடம் மீது நடத்தப்பட்டுள்ளது.

இதில் 23 பேர் உயிரிழந்தனர் என காசாவின் சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலானது ஹமாஸ் அமைப்பின் மூத்த தலைவரை குறிவைத்து நடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளதுடன் மக்கள் அதிகமாக வாழும் நகர்ப்புற பகுதிகளில் ஹமாஸ் பதுங்கியுள்ளனர் என்று இஸ்ரேல் குற்றம்சாட்டியுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போரில் காசாவில் உள்ள 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் நாட்டில் நுழைந்து நடத்திய தாக்குதில் 1200 பேர் கொல்லப்பட்டதுடன் 250க்கும் மேற்பட்டோரை பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றனர்.

மேலும், இவர்களில் பெரும்பாலானோர் போர் நிறுத்தத்தின்போது விடுவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



பக்கங்கள் 03

# கனடா முரசு

வியாழக்கிழமை 10.04.2025

## மாஃபியாக்கள் 7 பேர் கைது

கனடாவில் அதிகாரிகள் நடத்திய சிறப்பு நடவடிக்கையில் மா்ஃபியாக்கள் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இத்தாலிய 02▶



# கனடாவில் தனியார் துறையினரின் குறைந்தபட்ச சம்பளம் அதிகரிப்பு

**கனடாவில் தனியார் துறையில் பணியாற்றுவோருக்கான குறைந்தபட்ச சம்பளத்தை கனேடிய அரசு அதிகரித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

**தற்போது, கனடாவில் விலைவாசி அதிகரித்துவரும் நிலையில், இந்த அறிவிப்பை கனடா அரசு வெளியிட்டுள்ளது.**

**அத்துடன், தற்காலிக வேலை செய்வோருக்கும் இந்த ஊதிய உயர்வு பொருந்தும் என்பதால், கனடாவில் கல்வி கற்கும் இந்தியர்கள் உட்பட ஏராளமானோர் இந்த ஊதிய உயர்வால் பலனடைய வுள்ளனர்.**

அதன்படி, ஏப்ரல் மாதம் 1ஆம் திகதி முதல், அரசாங்கத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தனியார் துறை நிறுவனங்களில் பணி செய்வோருக்கான குறைந்தபட்ச ஃபெடரல் சம்பளம், ஒரு மணி நேரத்துக்கு 17.30 கனேடிய டொலர்களிலிருந்து 17.75 டொலர்களாக உயர்கிறது.

இலங்கை மதிப்பில் பார்த்தால், ஒரு மணி நேரத்துக்கான குறைந்தபட்ச சம்பளம், 3,608.27 ரூபாயிலிருந்து 3,702.13 ரூபாயாக உயர்ந்துள்ளது.

# கனடாவில் வீட்டு வாடகை தொடர்ந்தும் குறைகிறது



கனடாவில் வீட்டு வாடகை தொடர்ந்தும் குறைவடைந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனேடிய வீட்டு வாடகை தொடர்பில் வெளியான புதிய அறிக்கையில், கடந்த மார்ச் மாதத்தில் கனடாவின் தேசிய சராசரி வீடுகள் வாடகை 2,119 டொலர்களாக காணப்பட்டது.

இது கடந்த ஆறு மாதங்களாக தொடர்ந்த வருடாந்த 02▶




## மாஃபியாக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாஃபியாவை குறிவைத்து நடத்தப்பட்ட ஒரு பெரிய நடவடிக்கையில், மாண்ட்ரீல் பொலிஸார் புதன்கிழமை அதிகாலை ஏழு பேரை கைது செய்தனர்.

இந்த ஒருங்கிணைந்த முயற்சியில், 34 முதல் 59 வயதுக்குட்பட்ட ஆறு ஆண்களும், 44 வயதுடைய ஒரு பெண்ணும் கைது செய்யப்பட்டனர்.

மாண்ட்ரீலின் லாசல்லே மற்றும் வெர்டன் வட்டாரங்களிலும், தெற்கு கரையில் அமைந்துள்ள ப்ரோசார்டிலும் நடத்தப்பட்ட தொடர்ச்சியான இலக்கு வைக்கப்பட்ட சோதனைகளைத் தொடர்ந்து இந்த கைதுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நடவடிக்கை, மே மற்றும் ஜனவரி 2024 இல் நடத்தப்பட்ட முந்தைய வெற்றிகரமான சோதனைகளின் தொடர்ச்சியாகும்.

அந்த சோதனைகளில் கணிசமான அளவு போதைப்பொருள்கள், துப்பாக்கிகள் மற்றும் பெரும் தொகையிலான பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

ஓகஸ்ட் 2023 இல் தொடங்கி பல கட்டங்களாக நடைபெற்ற 'ப்ராஜெக்ட் அமெரிக்கானோ'வில் இதுவரை மொத்தம் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என SPVM இன் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் பிரிவின் தலைவர் பிரான்சிஸ் ரெனால்ட் தெரிவித்துள்ளார்.

இதுவரை, ப்ராஜெக்ட் அமெரிக்கானோவில் 32 கிலோகிராம் கொக்கைன், 4 கிலோகிராம் கிரிஸ்டல் மெத், 2.2 மில்லியன் டொலர் ரொக்கம் மற்றும் 12 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் படை தெரிவித்துள்ளது.

புதன்கிழமை அதிகாலை நடவடிக்கையில் சுமார் 40 பொலிஸ் அதிகாரிகள் ஈடுபட்டனர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் இன்று பிற்பகலில் மாண்ட்ரீல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.




## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைவை தொடர்ந்து பதிவு செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

Rentals.ca மற்றும் Urbanation நிறுவனங்கள் வெளியிட்டுள்ள மாதாந்த தரவுகளில், கடந்த 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் மார்ச் மாதத்தில் வீடுகள் வாடகை 2.8 வீதம் குறைந் துள்ளது.

எனினும், பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் மார்ச் மாதத்தில் வாடகை விலை 1.5 வீதம் உயர்ந்துள்ளது. இது கடந்த செப்டம்பர் மாதத்துக்கு பிறகு முதல் முறையாக மதாந்த அடிப்படையில் ஏற்படும் உயர்வாகும்.

முந்தைய மாதங்களை விட, மார்ச்சில் வாடகைக்கு வீடுகளை பெற்றுக் கொள்வோரின் செயல்பாடு அதிக ரித்துள்ளது. இது வாடகை மலிவாக உள்ள தற்கும் காரணமாக இருக்கலாம்.

இருப்பினும், அமெரிக்காவுடன் உள்ள வர்த்தக மோதலால் ஏற்படும் எதிர்மறையான பொருளாதார பாதிப்பும் வேலை இழப்புகளும், வரும் நாட்களில் வாடகை விலைகளுக்கு மேலும் அழுத்தம் ஏற்படுத்தக்கூடும் என குறிப்பிடப்படுகின்றது.

மேலும், கொவிட் 19 தொற்று தொடங்கிய 2020 மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில், சராசரி வாடகை இப்போது 17.8 வீத அதிகமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# டொராண்டோவில் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைநிறுத்தப்படும் அபாயம்

கனடாவின் டொராண்டோவில் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் பாடசாலையிலிருந்து இடைநிறுத்தப் படக்கூடிய அபாயம் உருவாகியுள்ள தாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

டொராண்டோ பொது சுகாதாரத் துறை இது தொடர்பிலான தகவல் களை வெளியிட்டுள்ளது.

இதன்படி, சட்டப்படி கட்டாயமான தடுப்பூசிகளை பெறாத மற்றும் செல்லுபடியாகும் காரணங்களை வழங்காத 10,000 இற்கும் மேற்பட்ட உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் இவ்வாறு இடைநிறுத்தப்பட உள்ள தாகத் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், 20 நாள்கள் வரை பாடசாலையிலிருந்து இடைநீக்கம் செய்யப்படக்கூடிய நிலை ஏற்பட்டுள் ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது

2008 இல் பிறந்த 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இடைநீக்க உத்தரவு அனுப்பி வைக்கப்படுவதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

மாணவர்கள் ஒன்பது கட்டாய தடுப்பூசிகளை பெற்றிருக்க வேண்டி யது சட்ட ரீதியான ஓர் கடப்பாடாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

டிப்தீரியா, டெட்டனஸ், பாலியோ, மீசில்ஸ், மம்ப்ஸ், ருபெல்லா, மெனிஞ் ஞோகோகல் நோய், பெர்டுசிஸ், மற்றும் 2010 பிறந்தவர்களுக்கு வரி செல்லா போன்ற தடுப்பூசிகள் கட்டா யமாக ஏற்றப்பட வேண்டும்.

தடுப்பூசி பெறவில்லை என்றால் செல்லுபடியாகும் விலக்கு சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாத சில மாணவர்கள் ஏற்கனவே இடை நிறுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது.

# வாகன அபகரிப்பில் ஈடுபட்ட பெண் கைது



கனடாவின் மிஸ்ஸிசாகாவில் வாகனக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

க்யூபெக்கை சேர்ந்த 24 வயதுடைய அஸ்மா ஒஆத்ரியா (Asmaa Ouadria) என்ற பெண்ணும் மற்றும் இன்னொரு அடையாளம் தெரிவிக்கப்படாத சிறு வன் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மார்ச் 29, கடந்த சனிக்கிழமை காலை 11 மணியளவில் விலோ வேய் Willow Way மற்றும் Riverside Place ரிசவர்சைட் பிளேஸ் பகுதியில் இந்த வாகனம் களவாடப்பட்டுள்ளது.

பொலிஸார் கண்காணிப்பு நடவ டிக்கையின் மூலம் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்மா ஒஆத்ரியா மீது, நான்கு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட் டுள்ளன.

மேலும், இவர் டர்ஹாம் பிராந் தியத்தில் இழைக்கப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பிலும் இந்தப் பெண் தேடப்பட்டு வந்ததாக பீல் பொலிஸார் கூறியுள்ளனர்.

மற்றொரு சந்தேகநபர், வயது காரணமாக அடையாளம் வெளி யிடப்படவில்லை. அவர்மீது, திரு டப்பட்ட சொத்துகளை வைத்திருந்த குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள் ளது.